தினகரன்
சென்னை 2 பிப்ரவரி 2010

ராமச்சந்திரா பல்கலை.யில்

# மகப்பேறு குறித்து சிறப்பு பயிலரங்கம்

## 7 நாள் நடக்கிறது

சென்னை, பிப்.2: போரூர் ராமச்சந்திரா பல்கலைக் கழகத்தில், மகப்பேறு குறித்து 7 நாள் சிறப்பு பயிலரங்கம் நேற்று தொடங்கியது. நேபாளம் உட்பட பல நாடுகளில் இருந்து 400க்கும் மேற்பட்ட மகப்பேறு மருத்துவதுறை பட்ட மேற்படிப்பு மாணவர்கள் பங்கேற்றனர். டாக்டர் ஜெயா வரவேற்றார்.

விஜயா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை இயக்குனர் சாவித்ரி தலைமை வகித்தார்.

ஜோசப் நர்சிங் ஹோம் இயக்குனர் குரியன் ஜோசப் பயிலரங்கை தொடங்கி வைத்தார். வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம், துறை தலைவர் டாக்டர் கே.வி.சோமசுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.